


# ஸ்ரீ ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் வாழ்க்கை வரலாறு – தமிழ்.

**Hari Sarvothama||** **Vayujeevothama||**

**Preface**

**I, as a devotee of SrI Sri Sankarshana Wodeyaru have immense pleasure in bringing out this e version of the history of His Holiness especially during this mahalayapaksha.**

**I humbly dedicate this e book in memory my parents late Sri H. Venkatramana Rao and Late Smt. H. Nagamani Bai who always received warmly the devotees to their residence at Polur either during the aradhana days or ordinary days.**

**I thank the erstwhile aradhana committee which initially published the book on 01/11/1976, composed by late Sri . N. S. Lakshmana Rao and later republished by Late Sri. N. L. Thirumal Rao who was my class teacher and also close family associate.**

**Photographs were collected from the internet for which Iam grateful to the up loaders. I sincerely thank everyone who participated in compiling this ebook.**

**My sashtaanga namaskarams to Sri 1008 Sathyathmatheertha Swamigalu whom I worship always.**

**Chennai** **H. RAGHAVENDRA RAO**

**16/09/2022** **9043458932**

**SRI SRI SANKARSHANA WODEYARU MOOLA BRINDAVANA SEVA SAMITHI ACCOUNT**

**NAME OF THE BANK : INDIAN OVERSEAS BANK**

**PLACE : POLUR – 606 803**

**SB ACCOUNT NUMBER : 107801000005472**

**IFSC CODE : IOBA0001078**

**Cheque / Drafts/Money Orders may be sent to Shri V . S . RAJAMANI RAO President and Landlord Murugapadi Village via Polur - 606 803. Please send sms to 8939516424 to send prasada.**

**Charama sloka**

**|| Sankarshana Yatheendraya Shanthaya Amala ChethasE**
**Dhantaya Bhajatham Kalpatarave Gurave Namaha ||**
**Sri Krishnarpanamasthu.**

| | |
|---|---|
| **LOCATION** | **ADJACANT TO RIVER CHEYYAR IN KARAIPOONDI VILLAGE 5 KMs EAST OF POLUR IN TIRUVANNAMALAI DISTRICT TAMIL NADU. POLUR IS CONNECTED BY ROAD AND RAIL. IT IS A RAILWAY STATION BETWEEN VILLUPURAM AND KATPADI SECTION.** |
| **BUS ROUTE** | **POLUR IS ABOUT 50 KMs FROM VELLORE AND 30 KMs FROM TIRUVANNAMALAI. POLUR IS WELL CONNECTED FROM CHENNAI ON BUS ROUTE NO : 148. KARAIPOONDI VILLAGE STOP IS JUST BEFORE THE CHEYYAR BRIDGE. THE MOOLA BRINDAVANA IS JUST HALF A KM FROM THE BUS STOP**<br>**FROM POLUR AUTO RICKSHAWS CAN BE ENGAGED AT A RATE OF Rs.120/- TO Rs.150/-**<br>**TO THE MOOLA BRINDAVANA.** |

**SRI SANKARSHANA WODEYARU SEVA SAMITHI IS MAINTAINING THE CHOULTRY, HANUMAN TEMPLE AND THE MOOLA BRINDAVANA. THE SAMITHI HAS A BANK ACCOUNT AS PER THE PREVIOUS PAGE.**

**THE DEVOTEES MAY MAKE USE OF THIS WHEN THEY DESIRE. NO GPAY, PAYTM, PHONEPE, QRCODE ETC.**

# முன்னுரை

ஸ்ரீ ஹரிகதாம்ருதசாரத்திற்கு ரஹஸ்யார்த்தம் எழுதி மிக்க புகழும் கீர்த்தியும் பெற்ற யதிசிரேஷ்டரான ஸ்ரீ சங்கர்ஷண ஒடையரின் மூலபிருந்தாவனம் திருவண்ணாமலை மாவட்டம் போளூருக்கு கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் செய்யாற்றின் கரையிலுள்ள கரப்பூண்டி கிராமத்திலுள்ளது. ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் கி.பி. 1862 ல் துந்துபி மார்கசிர சுத்த பஞ்சமியன்று பிருந்தாவனஸ்தரானார். அன்று முதல் தினசரி பூஜையும் ஆண்டு தோறும் ஆராதனைகளும் நடந்து வருகின்றன.

பல ஆண்டுகளாக ஆராதனைக்கு வரும் பல பக்தர்கள் ஸ்ரீ சங்கர்ஷண ஒடையரின் ஜீவிய சரித்திரத்தை அறிய ஆவல் கொண்டதால் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

கோதாவரி நதிக்கரையில் வசித்து வந்த ஸ்ரீ வெங்கட்ரமண ஆச்சாரியார் என்ற கவிசிரேஷ்டருக்கு ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் தம் ருத்ராம்சத்துடன் காட்சி அளித்ததினால் ஸ்ரீ வெங்கட்ரமண ஆச்சாரியார் ஸ்ரீ ஒடையர் மீது ஸ்ரீ சங்கர்ஷண கவசம், கல்பதரு ஸ்தோத்திரம், மங்களாஷ்டகம், நவரத்னமாலிகா என்ற ஸ்தோத்திரங்கள் செய்துள்ளார்.

45 ஆண்டுகளாக ஸ்ரீ சங்கர்ஷண தீர்த்தரின் பக்தனாக இருப்பதாலும், பல நாட்களாக அவரது ஜீவிய சரித்திரத்தையும் ஸ்ரீ வெங்கட்ரமண ஆச்சாரியார் செய்த ஸ்தோத்திரங்களையும் சேகரித்து வெளியிட வேண்டும் என்ற எண்ணத்துடனும், தமிழ்நாட்டிலும் ஆந்திரா, கர்நாடக ராஜ்யங்களிலுமுள்ள பல நண்பர்களுடன் தொடர்பு கொண்டு தேவையான விவரங்களைப் பெற்று இப்புத்தகத்தைத் தொகுத்துள்ளேன். இப்புத்தகத்தை எழுதுவதில் எனக்குத் தேவையான பல விஷயங்களைக் கொடுத்து உதவிய பெல்லாரி ஸ்ரீ ஹனுமந்தராவ், தார்வார் டாக்டர் கமலாபூர், போளூர் ஸ்ரீ H.வெங்கட்ரமணராவ், சேலம் ஸ்ரீ H.ராமச்சந்திரராவ், காட்பாடி N.சுப்பராவ் அவர்களுக்கும் மற்றும் பல குறிப்புகளைத் தொகுத்து வைத்திருந்த காலம் சென்ற என் மாமனார் ஸ்ரீ R.ராமச்சந்திரராவுக்கும் மிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இத்தோத்திரங்களைத் தமிழாக்கம் செய்து அவற்றிற்கு விளக்கங்களும் எழுதி உதவிய ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ V.நாகராஜாச்சார், வேலூர் பண்டிட் ஸ்ரீ K.வியாசாச்சார் அவர்களுக்கும் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

மற்றும் இப்புத்தகத்தை எழுத ஊக்கம் கொடுத்து ஆதரித்த ஸ்ரீ சங்கர்ண ஒடையர் ஆராதனை கமிட்டி அங்கத்தினர்களுக்கும் இதர நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இப்புத்தகத்தை குறிப்பிட்ட காலத்தில் நல்ல முறையில் அச்சடித்துக் கொடுத்த மயிலாப்பூர் வி.கே. பாலுவுக்கு எனது நன்றி உரித்தாகுக. மேலும் பல்வேறு

உதவிகளும் செய்துள்ள நண்பர்களுக்கு இதயங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புத்தகத்திலுள்ள ஸ்தோத்திரங்களைப் படித்தால் ஸ்ரீ சங்கர்ஷண ஒடையரின் மேன்மை நன்கு தெரியவரும். அப்பேர்ப்பட்ட மகானின் ஸ்தோத்திரங்களை தினமும் பாராயணம் செய்பவர்களுக்கு சகல நலன்களும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே அன்பர்கள் அனைவரும் இப்புத்தகத்தைப் படித்து சகலவித நன்மைகளையும் அடைவார்களாக.

ஆரணி, N.S.
லக்ஷ்மணராவ்
1-11-76 தொகுத்தவர்


## ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் சரித்திரம்
## (1810-1862A.D)

ஸ்ரீ ஜகன்னாததாசர் இயற்றிய ஹரிகதாம்ருத சாரத்திற்கு உன்னதமானவியாக்கியானம் எழுதி மிக்க புகழும் கீர்த்தியும் பெற்ற யதி சிரேஷ்டராக விளங்கும் ஸ்ரீ ஸ்ரீ சங்கர்ஷண ஒடையரின் மூல பிருந்தாவனம் திருவண்ணாமலை மாவட்டத்தில் போளுருக்கு கிழக்கே 5 கிலோ மீட்டர் தூரத்தில் செய்யாற்றின் கரையிலுள்ள கரபூண்டி கிராமத்தில் உள்ளது. ஸ்ரீ ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் 1862-ம் வருஷம் மார்கசீர்ஷ சுத்த பஞ்சமி தினம் தாம் இருந்த ஆச்ரமத்திலேயே உத்க்கிரமணராய் பூஸ்தாபனம் செய்யப்பட்டார். அன்று முதல் தினசரி பூஜையும் ஆண்டு தோறும் ஆராதனையும் நடந்து வருகின்றன.

### பூர்வாஸ்ரமும் இளமைப் பருவமும்

ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் பூர்வாஸ்ரமத்தில் தம்மண்ண நாயக் என்ற பெயர் பெற்றிருந்தார். இவருடைய மூதாதிகள் பூர்வத்தில் மாலப் பிரபா என்ற நதிக்கரையிலுள்ள குர்லா ஹொசூர் என்ற கிராமத்தில் வசித்து வந்தனர். இந்த கிராமம் பாரசத் தாலுக்காவில் இருந்ததாகவும் தற்போது சரவத்தி என்ற தாலுக்காவாக மாற்றப்பட்டு பெல்காம் மாவட்டத்தில் உள்ளது. முன் பம்பாய் ராஜ்யத்தில் இருந்தது தற்போது கர்னாடக ராஜ்யத்தில் உள்ளது. தற்போது சரவதத்திக்கு அருகே கட்டப்பட்டுள்ள அணையினால் அந்த கிராமம் ஆற்றில் மூழ்கிவிட்டது. நாயக்குடும்பத்தினர் தங்கம், வெள்ளி, வைரம், முத்து வியாபாரமும், லேவாதேவியும் செய்து மிக்க புகழ் பெற்றவர்கள். தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்யும் நிமித்தமாக தம்மண்ண நாயக்கின் முன்னோர்கள் தார்வாருக்கு வந்து குடியேறினர். ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் தார்வாடாவிலுள்ள மங்கள்வார்பெட் என்னுமிடத்தில் தூமப்ப நாயக்கின் இரண்டாவது மனைவி ஹொளெஹொன்னூரில் பிருந்தாவனஸ்தாராயிருக்கும்

ஸ்ரீ ஸ்ரீசத்யதர்ம சுவாமிகளுக்கு சேவை செய்ததின் பலனாக தம்மண்ண நாயக் பிறந்ததாக சொல்லப்படுகிறது.



**Sathya dharma theerthar**

ஸ்ரீசங்கர்ஷண ஒடையரின் சந்ததிகளை விசாரித்துத் தெரிந்தவரை அவர் வம்ஸாவளி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

லக்ஷ்மப்ப நாயக்

கோவிந்த நாயக்

அனந்தப்ப நாயக்

வெங்கப்ப நாயக்

தூமப்ப நாயக்

ராமண்ண நாயக்

தம்மண்ண நாயக்

தூமப்ப நாயகருக்கு இரு மனைவிகள். இவரது முதல் மனைவிக்கு ஐந்து



**Sowmya Narasimha worshipped by Sri Sankarshana Wodeyaru**
**Vai village**

பிள்ளைகள் இருந்ததாகவும், இரண்டாவது மனைவிக்கு தம்மண்ண நாயக் இரண்டாவது பிள்ளையாக பிறந்ததாகத் தெரிய வருகிறது. தம்மண்ண நாயக் 1810ம் ஆண்டு சகா 1732ல் பிறந்தவர்.

தம்மண்ணனுக்கு உபநயனம் செய்ய வேண்டிய வயது வந்ததும் அவருடைய பெற்றோர்கள் நல்ல நாள் பார்த்து ஒரு சுபமுகூர்த்தத் தில் உபநயனத்தை முடித்து வைத்தார்கள். இவர் வீட்டில் தீர்க்கதரிசியான ஸ்ரீ பீமவராஹாச்சாரியார் என்ற ஆசாரியர் இருந்து வந்தார். அவரிடமிருந்து எல்லா கிரந்தங்களையும் தம்மண்ணன் கற்று வந்தார். சிறு வயதிலேயே ஏகாதசி உபவாசமும் ஹரிவாசரமும் சரியாக அனுஷ்டித்து வந்தார். மற்றும் தினசரி பூஜைகளையும், பஞ்சபேத ஞானத்தையும் தாரதம்யத்தையும், மிக உன்னிப்பாக அனுஷ்டித்து வந்தார். ஆகையால் இவர் வீட்டிலிருந்த ஸ்ரீ பீமவராஹாச்சாரியார் இவரை 'ரிஷி'' என்று அழைப்பது வழக்கமாம்.

இவருக்கு தக்க வயது வந்த உடன் விவாஹம் நடந்தேறி இல்லற வாழ்க்கையை செவ்வனே நடத்தி வந்தார். இவருக்கு இரு குழந்தைகள் பிறந்தன. இவருக்கு இருபத்திரண்டாம் வயதில் இவரது மனைவி காலமானார். இரண்டாவது விவாஹம் செய்து கொள்ள இவருக்கு விருப்பமில்லை.

## உடுப்பி பிரயாணம்

ஸ்ரீமத் ஆசாரியார் செய்த கிரந்தங்களை சிரவணசாதனம் செய்யும் எண்ணத்துடன் ரஜதபீடபுரம் என்கிற உடுப்பி க்ஷேத்திரத்திற்குப் போய் ஸோதே மடத்து சுவாமிகளான ஸ்ரீ ஸ்ரீ விஸ்வப்ரிய தீர்த்தரிடத்தில் பாஷ்யம் முதலான 37 கிரந்தங்களையும் ஒழுங்காக குறைவில்லாமல் படித்து, அறிய வேண்டிய விஷயங்களை கேட்டு தெரிந்து கொண்டு, கிரந்தங்கள் படித்து பூர்த்தி ஆனதும் மங்களம் செய்வித்தார். இவரை ஸ்ரீ விஸ்வப்ரிய தீர்த்தர் கொண்டாடினார். தபசினால் தேகத்தை ஒடுக்கிக்கொண்டு சம்சார வாழ்க்கையில் இச்சை இல்லாதவராய் பிம்போபாசனம் செய்து கொண்டு பரமாத்மாவை தியானம் செய்துகொண்டு முப்பது வயது வரை காலம் கழித்தார்.

இந்த சமயத்தில் ஸ்ரீ சத்யபராயண தீர்த்த சுவாமிகளுடைய குரு - பரம குருவாகிய ஸ்ரீ சத்திய சந்துஷ்டர், ஸ்ரீ சத்திய சங்கல்பர் ஆகிய ஸ்ரீ பாதங்களவர்கள். பூசஞ்சாரம் செய்ய சௌகரியப்படாத தால் ஒரே இடத்தில் இருந்துகொண்டு அநேக வருஷங்கள் ஸ்ரீ ராம வேதவ்யாசருடைய பூஜையை செய்து கொண்டிருந்தபடியால் கடன் ஏற்பட்டு மடத்தின் செலவுக்கு போதுமான திரவியம் இல்லாமல் போய்விட்டது. ஸ்ரீ ராம வேதவ்யாசருடைய மதிப்பிட முடியாத நவரத்தின மண்டபத்தையும், வடாற்காடு மாவட்டம் ஆரணி ஜாகீர் சமஸ்தானத்தைச் சேர்ந்த பெரிய ராஜீபாய் என்பவரால் மடத்திற்கு தானமாகக் கொடுக்கப்பட்ட தங்க பாத்திரம் (கங்காளம்) இவை இரண்டையும் தம்மண்ண நாயக்கனின் சகோதரர் ஆன ராமண்ண நாயக் பெரிய பணக்காரரும் லேவாதேவிக்காரரும் என்று தெரிந்து அவரிடம் அடகு வைத்து வேண்டிய பணம் பெற்றுக் கொண்டனர். ராமண்ண நாயக் யாதொரு தயக்கமும் இல்லாமல் மடத்திற்கு தேவைப்பட்ட திரவியத்தைக் கொடுத்து உதவினார்.




UDUDI SRI KRISHNAR




**SRI VISWAPRIYA THIRTHARU**



**Sri Sri Sathya parayana theertharu**



**SRI MADHWACHARYA**




## UDUPI MADHWA SAROVAR



**VITTALA TEMPLE, DHARWAD. HERE SRI SANKARSHANA WODEYARU WROTE TIPPANIS TO H.K.S**

+

## மடாதிபதியுடன் திக்விஜயம்

சில காலங்கள் கழித்து ஸ்ரீ சத்திய சந்துஷ்டரின் சிஷ்யரான ஸ்ரீ சத்திய பராயண தீர்த்த ஸ்வாமிகள் மடாதிபதியானவுடன் திக்விஜயம் செய்ய ஆரம்பித்து முதல் முதலாக லக்ஷாதிபதியான ராமண்ண நாயக்கனின் வீட்டில் தங்கி இரண்டு மாதகாலம் ஸ்ரீ ராம வேதவ்யாசபூஜை செய்து வந்தார். ஒருநாள் ஸ்ரீசத்திய பராயணதீர்த்த ஸ்வாமிகள் ராமண்ண நாயக்கனிடம் கீழ்கண்டவாறு ''ஏ, சிஷ்ய னான ராமண்ணனே, ஸ்ரீராம வேதவ்யாசருடைய பூஜைக்கு நவரத்தின மண்டபமும், கங்காளமும் இல்லாதது எனது மனம் மிகவும் வியாகூலம் அடைகிறது. நான் தேசசஞ்சாரம் செய்து உனக்கு சேரவேண்டிய பணத்தை திருப்பிக் கொடுத்து விடுகிறேன். உன் சார்பாக உனக்கு உகுந்த ஒருவரை எங்களுடன் அனுப்பவும். அப்போதைக்கப்போது சேர்ந்த பணத்தை அவரிடம் கொடுத்து விடுகிறோம்'' என்று சொன்னார். இந்த உத்தரவை ஏற்றுக் கொண்டு ஒருவரை அனுப்ப உத்தேசித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் அவருடைய தம்பி தம்மண்ண நாயக் தானே சமஸ்தானத்துடன் போவதற்கு சம்மதப்படுவதாகச் சொல்லவே அதற்கு ராமண்ண நாயக் உடனே சம்மதித்தான்.

தம்மண்ண நாயக் திரவிய வசூல் நிமித்தமாகவும் தீர்த்த யாத்திரை உத்தேசமாகவும் இரு நோக்கங்கொண்டு சமஸ்தானத்துடன் புறப்பட்டார். சில நாட்கள் கழித்து காலத்தை வீணாகக் கழிக்க எண்ணமில்லாததினால் ஸ்ரீ சத்ய பராயண தீர்த்த சுவாமிகளிடம் மறுமுறை பாஷ்யாதி சகல கிரந்தங்களையும் சிரவணம் செய்து கொண்டு ஆனந்தத்தோடு இருந்தார். சிரவணம் பூர்த்தியானதும் மங்களம் செய்யும் உத்தேசமாய் ஸ்ரீ ராம வேதவியாஸருடைய பூஜைக்காக ஒருநாள் சிலவு தானே ஏற்றுக் கொள்வதாக சுவாமிஜியிடம் சொல்லி பூஜையை செய்வித்தார். ஸ்ரீ சத்திய பராயணதீர்த்த ஸ்வாமிகள் தம்மண்ண நாயக்கனைப் பார்த்து "அடே தம்மண்ணா நீ குருதக்ஷிணை கொடுக்க வேண்டுமல்லவா? உன் தமையன் ராமண்ண நாயக்கரிடம் அடகு வைத்திருக்கும் ஸ்ரீராம வேதவியாச தேவருடைய நவரத்ன மண்டபத்தையும், கங்காளத்தையும் குருதக்ஷணையாக கருதக்கூடாதா'' என்று சொன்னதும் தம்மண்ண நாயக் உடனே ஒப்புகொண்டார். பலிச்சக்ரவர்த்தி எப்படி மனப்பூர்வமாக தானம் செய்தாரோ அதேபோல் தம்மண்ண நாயக் ருத்ராம்ஸ பூதரானகாரணத்தால் ருத்ர ரூபியாக 37வது கல்பம் ஆரம்பித்தபடியால் மனப்பூர்வமாக ராமவேதவியாசருக்கு நவரத்தின மண்டபத்தையும், கங்காளத்தையும், ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்'' என்று சொல்லி கையில் ஜலம் விட்டுக் கொண்டு அர்ப்பணம் செய்தார். பூஜை போஜனாதிகள் முடிந்த உடன் ஸ்ரீசத்ய பாராயண தீர்த்த ஸ்வாமிகள் தம்மண்ணனிடம் மடத்திலிருந்து சேரவேண்டிய பணம் சேர்ந்து விட்டது என்று ஒரு கடிதமும், மடத்திலிருந்து வரும் துவாரபாலகரிடம் நவரத்ன மண்டபமும், கங்காளமும் கொடுத்து அனுப்பும்படி மற்றொரு கடிதமும் எழுதி அனுப்பும்படி ஆக்ஞை இட்டபடி

தம்மண்ண நாயக் இரு கடிதங்களையும் எழுதி ராமண்ண நாயக்கருக்கு அனுப்பினார். இக்கடிதங்களைகண்டவுடன் யாதொரு தயக்கம் இன்றி வந்த துவார பாலகரிடம் நவரத்ன மண்டபத்தையும், கங்காளத்தையும் கொடுத்தனுப்பினார். இவையிரண்டும் வந்து சேர்ந்ததும் ஸ்ரீ சத்ய பராயண தீர்த்த சுவாமிகள் மிக்க ஆனந்தங்கொண்டு, தம்மண்ணனை தன் முதல் சீடராக கருதினார்.

சில காலம் கடந்த பிறகு ராமண்ண நாயக் திரவியம் வந்து சேராததைக் கண்டு தன் தம்பியாகிய தம்மண்ணனுக்கு கடிதம் எழுதினார். தம்மண்ண நாயக் யாதொரு பதிலும் எழுதாமல் இருந்து விட்டார். உடனே ராமண்ண நாயக் தன் தம்பியை தேடிக்கொண்டு மடாதிபதி இருக்கும் இடத்திற்கு சென்று தன் தம்பியை சந்தித்தார். எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு மன கஷ்டத்துடன் தம்பியை தன்னுடன் அழைத்துக்கொண்டு ஊர் திரும்பினார். தான் செய்த செயலை மன வருத்தத்துடன் ராமண்ண நாயக் கேட்டதற்கு தம்மண்ண நாயக் எவ்வித யோசனையுமின்றி குடும்ப சொத்தில் தனக்குள்ள பாகத்தை தன் மனதிற்கேற்ப ஸ்ரீ ராம வேதவியாசருக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். அப்படி ஏதாவது நஷ்டமிருந்தால் தனக்கு சேர வேண்டிய பாகத்தை ராமண்ண நாயக்கனையே எடுத்துக் கொள்ளும்படி சொல்லவே ராமண்ண நாயக் தன் தம்பி சொன்னதை சரியே என்று ஏற்றுக்கொண்டார். சில காலம் தன் அண்ணனுடன் தன் வீட்டிலேயே இருந்தார். ஆனால் அங்கு இருப்பதற்கு அவர் மனம் ஒப்பவில்லை .

**உடுப்பி பிரயாணமும், சந்நியாசமும்**


தம்மண்ண நாயக் தன்னுடைய 32வது வயதில் சம்சார பாசத்தை விட்டு உடுப்பி க்ஷேத்திரத்திற்குப் போய் தண்ட தீர்த்தத்தில் பத்து பிராம்மணர்களை கூட வைத்துக்கொண்டு விதி பூர்வமாய் சந்நியாச ஆஸ்ரமத்தை வகிக்க சிரசில் 3 கேசங்களை விட்டுவிட்டு குரு உபதேசத்தால் சுத்தனாக வேண்டுமென்று ஸ்ரீசத்திய பராயண தீர்த்த சுவாமிகளின் சன்னிதானத்திற்கு மூன்று நாள் ஆகாரம் இல்லாமல் வழி நடந்து ஸ்நானாதி தர்மானுஷ்டானங்களைச் செய்து கொண்டு தனக்கு யதி ஆஸ்ரமம் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். ஸ்ரீ சுவாமிஜி தம்மண்ண நாயக் சந்யாசம் பெறுவது அவ்வளவு உசிதமல்ல கிருஹஸ்தராயிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ராமண்ண நாயகுக்கு சொல்லி அனுப்பி தன் தம்பியை கிரஹஸ்தனாகவே இருக்கும்படி சொல்லச் சொன்னார். ராமண்ண நாயக்கின் முயற்சி பலனளிக்கவில்லை. தம்மண்ண நாயக் ஆச்ரமம் கொடுக்காவிட்டால் தன் ஜீவன் இராது என்று பிடிவாதத்துடன் இருந்ததைக் கண்டு ஸ்ரீ சத்யபராயண தீர்த்த சுவாமிகள் தம்மண்ணனுக்கு ஆச்ரமம் கொடுத்து அவருக்கு சங்கர்ஷண ஒடையர் என்ற பெயரைச் சூட்டி அவரது தினசரி பூஜைக்காக வெள்ளியினால் செய்யப்பட்ட ஸ்ரீ வேணுகோபால கிருஷ்ணர்

விக்கிரகத்தையும் கொடுத்தார். ஆகவே ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் ஸ்ரீசத்திய பராயண தீர்த்த சுவாமியின் சீடரானார்.

ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் தம்முடைய இல்லத்தில் இரண்டு மாதங்கள் இருந்தார். அவருடைய ஆசரனை முறைகளுக்கு தன் வீடு சௌகரியமில்லாததைக் கண்டு அவ்வூர் அக்கிரஹாரத்திலுள்ள ஸ்ரீ விட்டல சுவாமி கோயிலில் தங்கி தனக்கு கிடைக்கும் பிக்ஷைகளைக் கொண்டு இருந்து வந்தார்.

**திருப்பதி யாத்திரை**


ஸ்ரீ சங்கர்ஷர்ண ஒடையருக்கு திருப்பதியிலிருக்கும் ஸ்ரீவேங்கடேச பெருமானை தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம்





**Sri Varahaswamy temple, Tirmala where Sri Sankarhana wodeyar was in tapas for two months**






ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் (சோளிங்கபுரம்) விகடன் தீபாவளி மலர் 1956

தோன்றவே உடனே ஹொளே நரசிம்மபுரம் வழியாக புறப்பட்டார். போகும் வழியில் சூர் நதிக்கரையில் தபஸ் செய்து கொண்டிருக்கும் போது தனக்கு முக்கியமாக வேண்டிய வஸ்துக்கள் தவிர மற்றவை தேவை இல்லை என்றும் உதிக்கவே திருப்பதி க்ஷேத்திரத்தை அடைந்த உடனே தன்னிடமிருந்த தங்கம், வெள்ளி மற்றும் தேவையற்ற வஸ்துக்களை சிறந்த பிராம்மணர்களுக்கு தானம் செய்துவிட்டு தனக்குத் தேவையான புலித்தோல், சந்தனக்கட்டை களால் செய்யப்பட்ட பாத்திரங்களையும் வைத்துக் கொண்டு ஸ்ரீ வராஹமூர்த்தி சந்நிதானத்தில் இரண்டு மாதக்காலம் தபஸ் செய்து வந்தார். ஒருநாள் ஸ்ரீ சங்கர்ஷணரின் கனவில் ஸ்ரீ வேங்கடாசலபதி தோன்றி அவரை கடிகாசலம் (சோளிங்கபுரம்) என்ற க்ஷேத்திரத்தில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரையும் ஸ்ரீ யோகாஞ்ஜநேயரையும் தரிசிக்குமாறு கட்டளை இட்டார். அப்படி இருக்க அவர் புறப்படுவதற்கு முன் மற்றொரு நாள் சொப்பனத்தில் வேலூருக்குப் போய் அங்கு பிருந்தாவனஸ்தராயிருக்கும் ஸ்ரீசத்யாஜிராயருடைய மடத்திலுள்ள பாத்திரங்களை அபகரித்து சரிவர பூஜை செய்ய முடியாதபடி அங்குள்ள சத்யபோத சாமாச்சார் பல இடையூறுகள் செய்து கொண்டிருப்பதால் அதை சீர்படுத்தி ஸ்ரீசத்தியாஜிராயருக்கு சேவை செய்யும்படி கட்டளையின்படி கடிகாசலத்திலுள்ள லக்ஷ்மி நரசிம்மரையும் யோகாஞ்ஜனேயரையும் தரிசனம் செய்த பிறகு வேலூர் வந்து சேர்ந்தார். அங்கு சில கிரஹஸ்தர்களைக் கொண்டு ஸ்ரீ சத்யாஜிராயர் சேவைக்கு இருந்த இடையூறுகளை நிவர்த்தி செய்து அங்கேயே 9 வருஷ காலம் சேவை செய்து வந்தார். சில சிறந்த குரு பக்தியுள்ள சிஷ்யர்களாகிய ஆரணி ஹனுமந்தராவ், சாமராவ், மாதவராவ், சஞ்சீவிராவ், ஆத்ய சீனிவாஸாச்சார், முதலியோர் ஸ்ரீ சங்கர்ஷண

ஒடையரை சித்தூருக்கு அருகிலுள்ள கிரீம்ஸ் பேட்டைக்கு அழைத்துச் சென்று அங்கு ஸ்ரீமத் ஆசாரியர் செய்த பல கிரந்தங்களையும், ஹரிகதாம்ருதசாரத்தையும் அவரிடமிருந்து கற்று வந்தனர். பிறகு மறுபடியும் வேலூருக்கு வரும் தருவாயில் ஸ்ரீ சங்கர்ஷண ஒடையருடைய பரம குருவாகிய ஸ்ரீ சத்திய பராயண தீர்த்தர், வேலூருக்கு வந்து விஜயம் செய்த போது ஸ்ரீ சத்யாதிராயர் பிருந்தாவனத்தில் சரிவர பூஜை நடப்பதைக் கண்டு ஆனந்தித்து பக்தியையும், சிரத்தையையும் அறிந்து ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர்

"உனக்கு ராமேஸ்வர யாத்திரை பலன் கிட்டி விட்டது. இனியும் இங்கே இருந்து சேவை செய்யவும்'' என்று சங்கர்ஷண ஒடையரிடம் சொன்னார். ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் தன் சிஷ்யர்களுடன் பல க்ஷேத்திரங்களை தரிசித்து வந்தார். ஸ்ரீ ஒடையர் ஆசாராதி விதிகளை மாற்றிக்கொண்டு உபாசனையை அதிகமாகக் கொண்டும் பாதயாத்திரையாகவே தன் சிஷ்யர்களுடன் பல க்ஷேத்திரங்களை தரிசித்து வந்தார். இப்படி சஞ்சரித்து வருகையில் தம் சீடர்களுடன் ஓசூர் கிராமத்தில் எச். ஸ்ரீனிவாச ராவ் அவர்களது வீட்டில் சுமர் 3 ஆண்டுகள் தங்கி உபதேசம் செய்துவந்தார்.



**SRI SATHYAJI RAYARU, VELLORE**

இப்படி பல ஊர்கள் தரிசித்து வருகையில் ஸ்ரீ பிரம்ம சமுத்திரம் மத்வராயரின் விருப்பப்படி ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் போளூரிலுள்ள சம்பத்கிரி மலையின் நிழல் விழக்கூடிய செய்யாற்றின்கரையிலுள்ள கரபூண்டி கிராமத்தில் தங்கி அங்கு ஒரு மடம் கட்டப்பட்டு அங்கேயே இருந்து வந்தார். ஸ்ரீ ஒடையர் 1862ம்

வருடம் துந்துபி வருஷம் மார்கழி மீ சுத்த பஞ்சமி அன்று உத்க்ரமணராய் பூஸ்தாபனம் செய்யப்பட்டார். அன்று முதல் தினசரி பூஜையும் ஆண்டு தோறும் ஆராதனைகளும் நடந்து வருகின்றன. இன்றளவும் அவர் தியானம் செய்துவந்த அறை அந்த மடத்தில் அமைந்தளது. இந்த மடத்தில்தான் ஆராதனை நாட்களில் வரும் பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் பக்தி சிரத்தையுடன் அளிக்கப்படுகிறது. இந்த மடம் 165 வயது பழைமையயானது.



**CHOULTRY 165 YEARS OLD**



**Sri Sri Sankarshana Wodeyaru Tapas Room, Karapoondi**



**MUKHYA PRANA DEVURU**



SRI SANKARSHANA
WODEYARU MOOLA
BRINDAVANA
CAMPUS




**EARLIER BRINDAVANA AT THE TIME OF INTERMENT**



**SRI SANKARSHANA WODEYARU MOOLA BRINDAVANA**

**பிருந்தாவனத்தின் மஹிமை**

1862- ம் ஆண்டில் ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் உத்க்ரமணராய் பூஸ்தாபனம் செய்யப்பட்டபோது நேரில் கண்ட ஒரு வயது முதிர்ந்த பெரியவரைக் கேட்டு தெரிந்து கொண்ட விஷயங்களை இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் தம் சிஷ்யரான சஞ்சீவிராவைக் கூப்பிட்டு யதிகளுக்கு செய்ய வேண்டிய ஈமச் சடங்குகளை செய்ய தயாரித்துக் கொள்ளும்படி சொன்னதும் சஞ்சீவிராவ் முதலில் பயந்ததாகவும் பிறகு உடனே மற்ற பிராமணர்களைக் கொண்டு செய்ய வேண்டிய காரியங்களை செய்து இடத்தைச்சுத்தம் செய்து தன்குருவை பூஸ்தாபனம் செய்வித்தாராம். சில மாதங்கள் கழித்து சஞ்சீவிராவின் கனவில் ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் தோன்றி அவரிடம் தான் சொன்னபடி சரியாக செய்யவில்லை என்று சொன்னதாக தெரிகிறது. பிறகு மறுநாள் சில பக்தர்களுடன் கூடி அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்குச் சென்று சோதித்தபோது அங்கு கூடி இருந்த ஜனங்களும் ஆச்சர்யத்துடன் ஸ்ரீ சங்கர்ஷண ஒடையரின் தலையில் ஜடை வளர்ந்திருந்ததையும், கோபிசந்தனத்தினால் போடப்பட்ட துவாதச முத்திரைகள் முன்




# 1940s VIEW

**Polur Sampathgiri Hill the shadow of which falls over the moola Brindavana in the everings in certain period**



**SWAYAMBU LAKSHMI-NARASIMHA**



**OGHUR H. SRINIVASA RAO**



# THIRTHA PRASADHA

போட்டது போல் பிரகாசமாகவும், மற்றவைகள் எல்லாம் அப்படியே இருந்ததாகவும் கண்டு களித்தார்களாம். அங்கு கூடி இருந்த எல்லோரும் இவர் ருத்ராம்ஸம் பொறுந்தியவர் என்று தீர்மானித்தார்களாம். எட்டு மாதங்கள் கழித்து ஸ்ரீ சங்கர்ஷணர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே பிருந்தாவன கட்டிடம் கட்டப்பட்டது.

கோதாவரி ஜில்லாவில் வசித்து வந்த உத்தம ஆசார்ய புருஷரான ஸ்ரீ வேங்கடரமண ஆச்சாரியார் என்பவருக்கு ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் தம் ருத்ராம் ஸத்துடன் காட்சி அளிக்கவே, அதைக் கண்டு களித்து ஸ்ரீ வேங்கடராமணா சாரியார், ஸ்ரீ சங்கர்ஷண கவசம், கல்பதரு ஸ்தோத்திரம், மங்களாஷ்டகம் நவரத்னமாலிகா என்ற ஸ்தோத்திரங்களை செய்துள்ளார். அவைகளும் அர்த்தத்துடன் இப்புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சில காலம் கழித்து பெரிய மடமும் சத்திரமும் கட்டப்பட்டன.

ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் பரம பக்த ஞானியாயும், சாஸ்திர நிபுணராயும், ஸ்ரீ ஹரிகதாம்ருத சாரத்திற்கு ரகஸ்யார் தங்கள் எழுதி மிக்க புகழும் கீர்த்தியும் பெற்று விளங்குகிறார். இப்படிப்பட்ட மகானின் பிருந்தாவனத்தை தரிசிப்பதாலும், அவரது ஸ்தோத்திரங்களை படிப்பதாலும், சகல நன்மைகளும் ஏற்படும்.

குறிப்பு: மங்களாஷ்டகத்தையும், நவரத்ன மாலிகாவையும் படித்தால் இவரது மகிமையும் அந்த நாட்களின் ஆராதனை எவ்வளவு சிறப்பாகவும், பிரபலமாகவும் நடந்தேறியது என்று தெரியவரும்.

**ஸ்ரீ ஜகன்னாத தாசரும் ஹரிகதாம்ருதசாரமும்**

ஸ்ரீ மத்வ மத சித்தாந்தங்களையும் பல தத்வங்களையும் பாமர ஜனங்களுக்கு அநேக மகான்கள் தோன்றி பல அதிய கிரந்தங்களின் மூலம் தெளிவுபடுத்தியிருந்த போதிலும் அத்யந்த பக்தி மிகுந்த பல தாசர்கள் பலர் தோன்றி சங்கீத ரூபமாக துவைத் மதசித்தாந்தங்களையும் தத்வங்களையும் ஆசரண முறைகளையும் படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் பக்தி பரவசமாக சங்கீத முறையில் கீர்த்தனைகளாகவும், சுளதிகளாவும், எடுத்துரைத் துள்ளனர்.



SRI JAGANNATHA
DASARU, MANVI

ஆத்மா பாவச் சிந்தனையினின்றும் பாவக்கிரியையினின்றும் விடுதலை பெற்று பரிசுத்தத் தன்மை அடைவதே மோக்ஷம். உபாசனையே மோக்ஷத்தை சம்பாதிக்க முக்கியமான மார்க்கம். சத்சங்கம் ஸத்கிரந்த காலக்ஷேபம், ஸ்ருஷ்டி விமர்சனை, இந்திரிய நிக்கிரகம், பாவனுதாபம், ஏகாந்த பிரம்மத்தியானம் முதலியவைகளை அவலம்பிக்க வேண்டும். ஞானம், பக்தி, வைராக்யம் இம்மூன்றும் முக்கியமான மோக்ஷ சாதனங்களாகும். பரமாத்மாவை தியானம், உபாசனை, பக்தியாகிய மூன்று வித சாதனங்களால் அடைய முயலவேண்டும். (முண்டோக உபநிஷத்) இப்பேர்ப்பட்ட ஞானத்தையும், பக்தியையும், வைராக்யத்தையும் பாமர ஜனங்களுக்கு ஊட்டிய கர்னாடக சாம்ராஜ்யத்தில் தோன்றிய தாசர்கள் பலர். உதாரணமாக,


ஸ்ரீ பாதராயர், ஸ்ரீ வாதிராஜர், ஸ்ரீ வியாசராயர், ஸ்ரீ புரந்தரதாசர், ஸ்ரீ கனகதாசர், ஸ்ரீ கொபாலதாசர், ஸ்ரீ விஜயதாசர், ஸ்ரீ ஜகன்னாததாசர் முதலியோர். அபரோக்ஷ ஞானிகளாக விளங்கியவர்கள் சிலரே. அபரோக்ஷ ஞானம் எல்லோருக்கும் கிட்டுவதில்லை. அத்யந்த பக்தியும், உபாசனையும், வைராக்கியமும் இருந்து எப்பொழுதும் பகவத் தியானத்தில் ஈடுபடுபவர்களுக்கே பகவான்காக்ஷி அளிக்கிறார். இம்மாதிரிகாக்ஷி அளிப்பது எல்லோருக்கும் ஒரே மாதிரி இராது. கடவுள் யார் மீது தன் கடாக்ஷத்தை செலுத்துகிறாரோ அப்பேர்ப்பட்டவர்கள்தான் அபரோக்ஷ ஞானிகள் என்று அழைக்கப்படுவார்கள். அப்படிப்பட்ட மஹான்களில் ஸ்ரீஜகன்னாததாசர் ஒருவராவர்.

18-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் மிக்க கீர்த்தியும், புகழும் பெற்று அபரோக்ஷ ஞானியாக விளங்கியவர். ஸ்ரீ ஜகன்னாததாசர். கர்னாடகத்திலுள்ள மானவி என்ற க்ஷேத்திரத்தில் சகா 1649 கீலக ஆண்டு சிராவண சுத்த துவாதசி அன்று பிறந்தவர். அவதூத சிகாமணிகளாக விளங்கியதுருவாம்சமாகிய ஸ்ரீபாதராயர், பிரகலாத அம்சமாகிய ஸ்ரீ வியாசராயர்,ஸ்ரீ வாதிராஜர், நாரதாம்சமாகிய ஸ்ரீ புரந்தரதாசர் இவர்கள் ஸ்ரீ ஜகன்னாத தாசரின் கனவில் தோன்றி "ஜகன்னாத தாசரே, மோக்ஷத்தை அடைவதற்கு சாதகமாயுள்ளது. ஹரி கடாக்ஷமே. ஆகவே பாரதம், பாகவதம் புராணங்கள், உபநிஷத்துகள், கிரந்தங்கள் யாவற்றையும் நன்கு கற்று அதிலுள்ள சாராம்ஸங்களை எடுத்து, ''ஹரிகதாம்ருத சாரம்' என்ற நூலை இயற்றும்படி ஆணை இட்டனர். அதன்படியே ஸ்ரீ ஜகன்னாததாசர் எல்லா கிரந்தங்களையும் கற்று அவைகளின் சாராம்சங்களை எடுத்து ஒன்று தொகுத்து "ஹரிகதாம்ருத சாரம்'' என்ற நூலை 33 சந்திகளாக (அத்தியாயங்களாக) ஒவ்வொரு சந்தியும், தனித்தனி ராகத்திலும் தாளத்திலும் பாடக்கூடிய வகையில் ஸ்ரீ ஜயதேவர் அஷ்டபதி இயற்றியது போல் இயற்றியுள்ளார்.

இக்காலத்தில் எல்லாகிரந்தங்களையும் படித்து விஷயம் அறிந்து கொள்வது மிகவும் கஷ்டமானதால் இந்த ஹரிகதாம்ருத சாரத்தை படிப்பதால் எல்லா கிரந்தங்களையும் படித்த பலனும் பரமாத்மாவின் அருளும் கிட்டும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. மோக்ஷ மார்க்கத்தை அனுசரிக்க ஒரு சாதனமாக இந்நூல் சிறந்து விளங்குகிறது. ஸ்ரீ ஜகன்னாததாசர் சகா 1731 சுக்கில ஆண்டு பாத்ரபத சுத்த நவமி பானுவாரம் மூலா நக்ஷத்திரம் கூடிய தினம் அவரது 82ஆம் வயதில் பரமாத்மனின் பாதங்களை அடைந்தார். இவரது ஜீவிய சரித்திரத்தில் மற்ற விஷயங்கள் மிகவும் விவரமாக எழுதப்பட்டுள்ளன.

ஹரிகதாம்ருத சாரத்தில் மதாசரண பத்ததிகள், பஞ்சபேத தாரதம்யங்கள், பரமாத்மனின் மஹிமை, வியாப்த்தி, ரசவிபாகம், விபூதி ரூபங்கள், யக்யங்கள், பஞ்சேந்திரிய பஞ்சதன்மாத்ர, வர்ணாஸ்ரம தர்மங்கள், தியானக் கிரமங்கள், தேஹவிசாரம், ஸ்வாதந்தர விசாரம், சுவாஸ விசாரங்கள், ஸ்தோத்திர விசாரங்கள், பிம்போ பாசனக்கிரமம், அனுசந்தானக் கிரமங்கள்,

நாடி விசாரம், சமர்பண விசாரம், ப்ரதிமை பூஜாபத்ததி, ஹரி நாமஸ்மரண மஹிமை, போஜன நிவேதன விதிகள், தாரதம்யங்கள், ஸ்ரீநாராயண அவதார ரூபங்கள், பஞ்சபேத லக்ஷணங்கள், சர்வோத்தமனும் லக்ஷ்மி தேவியின் மஹிமையும், விக்னேஸ்வரரின் மஹிமையும், கருட புராணத்திலுள்ள கலி தர்மங்கள் முதலிய விஷயங்கள் அடங்கியுள்ளன.



Sri 1008 Sathya Pramoda Theertharu

**ஹரிகதாம்ருத சாரத்தைப் படிப்பதால் ஏற்படும் பயன்**

ஸ்ரீ ஜகன்னாததாசரின் சாக்ஷத் சிஷ்யரான கர்ஜு கீதாசப்பதாசர் பலஸ்ருதியில் விவரமாக சொல்லியுள்ளார். அதன் சாராம்சம் பின்வருமாறு.

இந்த ஹரிகதாம்ருத சாரத்தில் உள்ளபடி அனுஷ்டானம் செய்து வந்தால் சம்சார துக்கம் விலகும், நிஜபக்தி ஏற்படும். அதனால் பகவத் கிருபை உண்டாகும். ஜீவன் முக்தனாவதற்கு மிகவும் சாதகமானது. சத்கர்மானுஷ்டானங்களுக்கு சாதனமானது. அந்தி காலத்தில் யமதூதர்கள் சமீபத்தில் வராதபடி தடுக்கிறது. மங்களத்தை கொடுக்கிறது. ஆயுள், ஆரோக்யம், தனதான்ய வ்ருத்தி, பக்தி, வைராக்யம், மனோ நிக்ரகம், கவிசியாத யுக்த பராக்ரமம் கொடுக்கிறது. கங்கா நதிஸ்நான பலனைவிட அதிகமானது. ஹரிகதாம்ருத சாரத்தை ஸ்ரவணம் செய்யும் ஸதீரிகளுக்கு பதிபக்தியும், புருஷர்களுக்கு சம்சாரத்தில் சந்தோஷமும், ஜீவனுக்கு லோபமில்லாமல் மனதிற்கு ஆனந்தத்தை ஊட்டுகிறது. தாரதம்யத்துடன் வந்தனம் செய்பவர்கள் சத்கதமான மோக்ஷத்தை அடைபவர்களாக இருப்பார்கள். இக்கிரந்தத்தை எல்லோரும் படித்து பகவத் கிருபையை பெற்று மோக்ஷத்தை அடைவார்களாக.

ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ:

பரம குருப்யோ நம: ஸ்ரீமதானந்த
தீர்த்த பகவத் பாதாசார்யே ப்யோ நம: ஸ்ரீஸங்கர்ஷண ஒடய
யதீந்த்ர குரவே நம: ஸ்ரீமத்தனும் பீம மத்வாந்தர்கத
ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹாய நம:

## 1. **அத ஸ்ரீ ஸங்கர்ஷண கவச ப்ராரம்பஹ:**

ஹரி ஹி ஓம்

ஸ்ரீருக்மிணீஸ சரணாம்புஜ சஞ்சரீகம்
ஸம்பன்ன காந்தி கவிஹ்ருத்யுருஜாகரூகம்
வ்ருந்தாவனாந்தர லஸத் வபுஷா கலங்கம்
ஸங்கர்ஷணாக்ய மஹிராஜ பணாம்க மீடே (1)

ஓம் ஸங்கர்ஷண : ஸிர: பாது பாலம் பாத்வலிகேக்ஷண:
ஸுந்ருதோக்தி: பாது வக்த்ரம் நாஸம் சௌகந்தி மால்யப்ருத் (2)

ஸச்சாஸ்த்ர: பாதுமே ஸ்ரோத்ரே நேத்ரே பாது ஸுநேத்ரவான்
கபோலம் மே க்ருபாஸில: பாத்வோஷ்டம் பக்தவத்ஸல: (3)

ப்ருவௌ கண்டம் புஜௌபாது குக்ஷிமந்தர் நிரீக்ஷண:
வக்ஷஹ் கக்ஷம் ஸ்தனௌ பாது நாபிம் பாத்வபய ப்ரத: (4)

பார்ஸ்வ ஹஸ்தாங்குளீன் பாது பாதுப்ருஷ்டம் யதீஸ்வர:
ஜானூரு ஜத்ரு ஜங்காங்ரீன் பாதுமே ஸஜ் ஜனாக்ரணீ: (5)

கடிம் மத்யம்சஜகனம் மேதோ மாம்ஸாஸ்ரு காந்தரகான்
பாது மேபூத நாதாம் ஸோ பாஹ்யம் யன்மே குஹாந்தரம் (6)

ஸர்வாங்கம் பாது யன்னோக்தம் ததுக்தம் தன்ம மாகிலம்
இதீதம் கவசம் திவ்யம் வேங்கடார்ய ஸமீரிதம் (7)

த்ரிகாலம் யோ ஜபேத் தஸ்ய வித்யா ஸம்பத் விவர்ததேஸங்கர்ஷணாயேதி
மனும் நமோந்த்யம் தார ஸம்யுதம்
(8)

ஸேம் பீஜத்வயோபேதம் ஜபேதஷ் டோத்தரம் ஸதம் ய ஏதத் கவசம் மந்த்ரம் ஸங்கர்ஷண குரோ ஸ்ஸுதீ:
(9)

ஓபித்வா புண்ய ஸலிலம் பிபேத் ப்ருந்தாவனம் கதம் வ்யவஹாரேச ஸம்வாதே ஜயஸ் தஸ்ய பவிஷ்யதி
(10)

மார்பயம் சோரபயம் நிர்காதாக்னி மஹா பயம் ஸர்பலூதக கோடாதி பயம் தஸ்ய ந வித்யதே
(11)

க்ஷயாபஸ்மார பீடாபிஸ்ஸீத தாபஜ்வராதி பி: துஸ்ஸஹைர் நேத்ர ரோகாத்யைர் நகிஞ்சதபி பாதித:
(வாதித:) (12)

நாம் னஸ்தஸ்ய கதா பீடா நேஹா முத்ர ஸுகீஸவை தாரயேன் மந்த்ரவத் யந்த்ரம் ஸாவந்த்யா புத்ரிணீ பவேத்
(13)

குரோர் வ்ருந்தாவனஸ்யைவ தர்ஸனேன மஹாத்மனஹ: மாஹாத்ம்யம் படனேனேஷ்ட ஸித்திஸ்யான் நாத்ர
ஸம்ஸ ய: (14)

இதி ஸ்ரீவேங்கட பூஸுரேண விரசிதம் தம் ஸ்ரீஸங்கர்ஷண கவசம்
ஸம்பூர்ணம்
ஸ்ரீக்ருஷ்ணார்ப்பண மஸ்து.

## ஸ்ரீ சங்கர்ஷண கவசத்தின் விளக்கம்

(1) தாமரை மலரை வண்டு மொய்த்துக் கொண்டிருப்பது போல் ஸ்ரீ கிருஷ்ணனின் பாதகமலங்களையே எப்போதும் தியானிப்பவரும், காந்தியுள்ள கவிகள் ஹிருதயத்தில் வசிப்பவரும், தோஷம் ஏதும் இல்லாதவரும் ஆதிசேஷனின் அம்சராக இருப்பவரும், பிருந்தாவனத்தில் பிரகாசிக்கின்றவரும் மக்களின் பாபத்தை போக்குகின்றவருமான ஸ்ரீ ஸங்கர்ஷண குருராஜருக்கு எனது நமஸ்காரங்கள்.

ஸ்ரீ ஸங்கர்ஷண குரு என் தலையை காப்பாற்றுவாராக. வண்டு போல கருவிழிகளையுடைய அவர் என் நெற்றியை ரக்ஷிக்க வேண்டுகிறேன். ஹிதத்தையும் சத்தியத்தையுமே பேசும் அவர் என்

முகத்தை காப்பாற்றட்டும். வாஸனையுள்ள புஷ்பமாலையை தரிக்கும் அவர் என் மூக்கை காப்பாற்றட்டும்.

(3) உயர்ந்த சாஸ்த்ரக் ஞானியான குரு என் காதுகளையும் அழகிய கண்களையுடைய அவர் என் கண்களையும், தயா ஸ்வரூபமான அவர் என் தாடைகளையும், பக்தவாத்ஸல்யமுள்ள அவர் என் உதடுகளையும் காக்கட்டும்.

(4) தன் ஹிருதயத்திலே பகவத் ரூபத்தைப் பார்க்கும் குரு எனது தோள்கள், கழுத்து, புஜங்கள், வயிறு இவற்றை காப்பாற்றட்டும். அபயம் அளிக்கவல்லவரான அவர் எனது மார்பு, விலாப்பக்கங்கள், ஸ்தனங்கள், நாபிப் பிரதேசத்தையும் காக்கட்டும்.

(5) எனது முழந்தாள்கள், விரல்கள், பின்பாகம், இவற்றை யதிஸ்ரேஷ்டரான ஸ்ரீ சங்கர்ஷணர் காப்பாற்ற வேண்டும். ஸாதுக்களில் முதல்வராக எண்ணப்படும் அவர் எனது துடைகள், மீன் கண்டங்கள், பாதங்களையும் காப்பாற்றட்டும்.

(6) இடுப்பு, மத்திய பாகம், பிருஷ்ட்ட மேடு, மேதஸ், மாம்ஸம் ரத்தம் இவற்றை ருத்ராம் சரான ஸ்ரீசங்கர்ஷணகுரு காப்பாற்றட்டும். வெளிப்படையானதும் உள்ளிருப்பதுமான எனது அங்கங்களையும் அவர் காப்பற்றட்டும்.

(7) என்னால் சொல்லப்பட்டதும், சொல்லப்படாததுமான எல்லா அங்கங்களையும் அவர் காப்பாற்றட்டும். இப்பேர்ப்பட்ட திவ்யமான கவசம் வேங்கடார்யர் என்பவரால் இயற்றப்பட்டது.

(8) தினமும் மூன்று காலங்களிலும் இதை ஜபிப்பவர்களுக்கு வித்யா -ஸம்பத் விருத்தியாகிறது. ''ஓம் ஸங்கர்ஷணாய நம:'' என்பது ஸங்கர்ஷண மந்த்ரம்.

(9& 10) "ஸ்ரிம்', "ஸம்" என்னும் இரண்டு பீஜாக்ஷரங்களுடன் கூடிய (மேற்சொன்ன) சங்கர்ஷண மந்திரத்தை 108 தடவை ஜபித்து, இந்த கவசத்தையும் பாராயணம் செய்து, பிருந்தாவன ஜலத்தையும் எடுத்துக் கொண்டால் வியவஹாரங்களில் ஐயம் உண்டாகும்.

(11) அம்மை முதலிய தொத்து நோய், திருட்டு, நெருப்பு கிருமிகள் இவற்றினால் பீடிப்பதில்லை.

(12) க்ஷயரோகம், அபஸ்மாரம், குளிர்ஜ்வரம், உஷ்ண ஜ்வரம், மற்றும் தாங்க முடியாத கண்ணோய் முதலிய நோய்களால் கொஞ்சமும் பீடிக்கப்படுவதில்லை.

(13) அவரது நாமத்தை ஜபம் செய்பவருக்கு எப்போதும் ஆபத்து இல்லை . இங்கேயும், மறு உலகத்திலும் சுகம் உண்டாகும். "நாம் னஸ்தஸ்ய கதாபீடா நேஹாமுத்ரஸுகீஸவை' என்ற மந்திரத்தோடு கூடிய யந்த்ரத்தை தரிக்கும் பெண்மணி மலடியானாலும் புத்திரனை யடைவாள்.

(14) பிருந்தாவனத்திலிருக்கும் மஹாத்மா ஸ்ரீ சங்கர்ஷணரை தரிசிப்பதாலும், அவரது மஹிமைகளைப் படிப்பதாலும் இஷ்ட ஸித்தி உண்டாகும். இதில் ஸந்தேகமில்லை.

## 2. அத கல்ப தருஸ்தோத்ரம்

ஸங்கர்ஷணம் ஸச்சரணம் வரேண்யம் அனாவிலாத் மான
மனிந்தய லீலம்
ஸங்கீர்தயந்தம் பரமம் புமாம்ஸம் ஸங்கர்ஷணாக்யம்
குருராஜ மீடே (1)

ஓம் ஸங்கர்ஷணயதீந்த்ராய ஸாந்தாய ஸுதியே ஸ்ரியே தாந்தாய பஜதாம் கல்பதரவே குரவே நம:
(2)

ஸங்கரம் நமதாம் ஸாக்ஷாத் ஸங்கராம்ஸம் அஹர்நிஸம் ஸங்கரக்ஞான முத்ராங்கம் ஸங்கர்ஷண குரும்பஜே
(3)

இதி ஸ்ரீஸங்கர்ஷண கல்பதருஸ்தோத்ரம்

ஸம்பூர்ணம்

"ஸ்ரீக்ருஷ்ணார்ப்பண மஸ்து"

(1) பாபத்தை அழிப்பவரும், சிறந்த படிப்பையும், அறிவையும் அடைந்தவரும் சிறந்தவரும், தூய்மையான ஆத்மா உள்ளவரும், நிந்திக்கப்படாத செயலை உடையவரும், மேலான பகவானை (விஷ்ணுவை, நாமத்தை) உச்சரித்துக் கொண்டிருப்பவரும் ஆன சங்கர்ஷணர் என்ற குருவை (அக்ஞான இருளைப் போக்குபவரை) துதிக்கிறேன்.

(2) சங்கர்ஷணர் என்ற சிறந்த சன்யாசியும், சாந்தரூபியும் சிறந்த புத்தியுள்ளவரும், அடையத்தகுந்தவரும் அடக்கமுள்ளவரும், தன்னை ஆராதிப்பவர்களுக்குக் கற்பக விருக்ஷம் போல் யாவற்றையும் அளிப்பவருமான குருவின் பொருட்டு நமஸ்காரம்.

(3) வணங்குகிறவர்களுக்கு க்ஷேமத்தை அளிப்பவரும் சங்கரரின் அம்சமானவரும் பகலும் இரவும் க்ஷேமத்தை அளிக்கும் முத்திரையும் அறிவைக் கொடுக்கும் முத்திரையும் காண்பிக்கும் சின்முத்திரை தரித்துக் கொண்டிருப்பவரும் ஆன சங்கர்ஷண குருவை பஜிக்கிறேன் (சேவை செய்கிறேன்)

## 3. அத ஸ்ரீஸங்கர்ஷண நவரத்ன மாலிகா ஸ்தோத்ர ப்ராரம்பஹ

ஸம்பத் பூப்ருது பத்யாகா சலதலச் சாயாஸ்தலீ ஸம்ஸ்திதம் ஸாந்தம் ஸத்ய பராயணாஹ்வய குரோஹோ ஸ்ரீபாணி
பத்மோத்பவம்
ஸத் ஸந்துஷ்ட யதிப்ரஸிஷ்ய மனகம் ஸத்பக்த ஸம்கீர்திதம் ஸ்ரீஸங்கர்ஷண தீர்த பூஜ்ய சரணம் ஸம்ராதயாமோ வயம்
(1)

மித்யா ப்ரஸ்புட வாததி: கரணக்ருண் மாயீப் நிர்பேதன ந்யாய ப்ரௌட குஹோத்ய துக்தி கலனாக்ஷவேளா
ஸமுஜ்ரும்பண:
நஸ்ஸங்கர்ஷண ஸம்யமீ நரஹரிஹி ஸ்ரீபாதமூலாஸ்ரயோ யோ அவித்யா கஹனோத்த கும்பிபயத: பாயாத் ஸ
பஞ்சானன: (2)

பிப்ராணம் மணிசங்கணத் பணிபணாஸ்ரேணிம் லலாடேக்ஷணம்
ஸாணாகர்ஷித ஸோண ரத்ன கிரண ஸ்ரீமத் ஸுநேத்ரத்வயம்
மூர்த்னாலங்க்ருத நேத்ர முன்னதிதமம் முத்ராங்க தோரந்தரம் ஸ்ரீகாந்தாத்யுஷி தாந்தரம் ஸ்மர குரும் ஸங்கர்ஷணாக்யம் யதிம்
(3)

ப்ரத்யப்தம் ஸவிஸேஷ பூஷணகணை: திவ்யாபிஷேகைர்த்
விஜை:

பஞ்சம்யாந்து ஸமச்யதே த்விஜவரை: ஸன்மார்கஸீர்ஷே ஸிதே

ய: பர்வோத்தர வாஸரோத்ஸவயுதோ நஸ்ரேயஸே ஸுஸ்ரவா: பூயாத்பூஸுரஹர்ஷதாயக மதி: ஸங்கர்ஷணாக்யோ யதி: (4)

ப்ராஞ்சத் பஞ்சமுகாஞ்ஜநேய கருணா பாணிம் தயாபாங்கதம் ஸம்ப்ராப்தாசல பக்தி ஸுவ்ரத தபோவைராக்ய பாக்யாகர: ஸ்ரீகோபாலக ரங்கவிட்டல பத த்யானப்ரபூதாத்மகோ நஸ்ஸங்கர்ஷண தீர்த்த பூஜ்ய சரணோ தத்யாத் ஸதா மங்களம் (5)

யத்ப்ருந்தாவன தர்ஸனாத் க்ருஹ மஹாபீடாச்யுதிம் வா பயம்
யத்ஸ்ம்ருத்யாஜ்வரகுக்ஷிகோள விலூடத் குல்மாதி பாதாபஹம்
யன்மந்த்ரார்த்த நிஷேவணாச்ச ஸுத்ருஸம் ப்ராப்னோத்யலம்
மானவ:
ஸோ(அ)ஜியாதிஹ பாஹுதா தடவஸந் ஸங்கர்ஷணாக்யோ
குரு: (6)

பூர்ணப்ரக்ஞமதாம் ருதாம்புதி கலா பூர்ணேந்தவே பாஹுதா ஹ்ரதின் யுத்தமயாந்து தீரவிலஸத் ப்ருந்தாவனா வாஸினே ஸ்ரீஸம்பத்கிரி நாரஸிம்ஹ விமல க்ஷேத்ராவனீதேவதா த்ராத்ரே தே நதயா ஸுபாய ஜகதாம் ஸங்கர்ஷண ஸ்வாமினே (7)

ஸந்தாபான் ஸமயன் ஸுதாமயத்ரஸா ஸாந்த ஸ்ஸதா மாதராத்
ரௌத்ரஸ்ஸது பத்ரவாம்ஸ்ச விவிதான் வித்ராவயன்
அர்த்தினாம்

ஸர்வக்ஞோ அத்ர விவர்ததே ஸுருசிரப்ரேக்ஷா ஸடோஹி ஸ்புடா
கோடீபிஸ்ஸ மலங்க்ருதஸ் ஸுவபுஷாஸங்கர்ஷணார்யாக்ரணீ: (8)
யத்ப்ருந்தாவன கல்பனார் தமவனௌ குப்தைர்த் விஜைஸ்
ஸோதிதே

திவ்யௌஜஸ் ஸுமுகம் விவர்திதநகம் ப்ரேங்கச்சிகம் ப்ரேயஸ: ஸச்சீலச் சவிதாங்கமேத திதி யத் ஸம்பாதிதம் தத்வபு: ஸங்கீர்ணம் ருசிஸங்குலம் கலயதாம் ஸங்கர்ஷணாக்யம்
மஹ: (9)
ஸ்ரீஸங்கர்ஷண தீர்த பூஜ்ய சரணம் ஸ்ரீரத்ன மால்யாங்கிதம் ஸ்தோத்ரம் வேங்கட பூஸுரேண பணிதம் கோதாதடீ வாஸினா

நக்தம் வா யதி வா திவாத்விஜ சயைஸ் ஸ்ரேயோர்த்தி
பிஸ்ஸுத்ருவம்
ஸ்ரோதவ்யம் படிதவ்யமிஷ்டஸுகதம் ஸத்பக்தி முக்தி ப்ரதம் (10)

"இதி ஸ்ரீமத் கவிகுல திலக ஸ்ரீமத்வாகிஸ தீர்த்த
கரகமல ஸஞ்ஜாத ஸ்ரீமத்வாதிராஜ தீர்த்த
குருப்ரஸாதித போதாங்குர மனோகண
வேங்கடரமண பூஸுரேண பணிதம்

ஸ்ரீஸங்கர்ஷண நவரத்ன மாலிகா ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்
ஸ்ரீக்ருஷ்ணார்ப்பண மஸ்து

## ஸ்ரீசங்கர்ஷண நவரத்னமாலிகா ஸ்தோத்திரத்தின் விளக்கம்

(1) சம்பத்கிரி மலையின் அடிபாகத்தில் உள்ள நிழலில் இருப்பவரும், அமைதியுள்ளவரும் ஸ்ரீசத்யபராயண தீர்த்தருடைய தாமரைக் கரங்களால் உருவாக்கப்பட்டவரும் சிறந்த சந்தோஷ முள்ள யதிகளைச் சீடராக உடையவரும், குற்றமற்றவரும், சிறந்த பக்தர்களால் புகழப்பட்டவருமான ஸ்ரீசங்கர்ஷண தீர்த்தருடைய பூஜிக்கத் தகுந்த திருவடிகளை நாம் ஆராதனை செய்வோமாக.

(2) உலகம் பொய் (ஜகத்மித்யா) என்ற வாதமாகிய கடலை அனுப்பவரும் மாயை என்னும் யானையைப் பிளப்பவரும் நியாய சாஸ்திரம் சிறந்த கம்பீரமானயுக்திகளின் மூலம் பெரிய சிம்ம நாதம் போல் கர்ஜிப்பவரும், ஸ்ரீ நரசிம்மரின் பாதத்தை அண்டியவரும் இந்திரியங்களை அடக்கியவரும் அறிவின்மையாகிய யானையைப் பிளக்கும் சிங்கம் போன்ற யதியான ஸ்ரீ சங்கர்ஷணர் எங்களைக் காப்பாற்றட்டும்.

(3) தலையில் மணிகளின் சப்தத்துடன் கூடிய ஆதிசேஷனின் படங்களை (தலைகளை) தரிப்பவரும், நெற்றிக் கண்ணுள்ளவரும், சாணையில் தீட்டப்பட்ட சிவப்பு ரத்தினங்களைப் போன்ற கண்களுள்ளவரும், தலையில் (நெற்றியில்) அலங்காரம் போன்ற உயர்ந்த கண்ணுள்ளவரும் இரு புஜங்களிலும் முத்திரையின் அடையாளம் உள்ளவரும் லக்ஷ்மியின் கணவரான விஷ்ணுவை மனதில் தியானிப்பவரும் ஆன சங்கர்ஷணர் என்ற யதியை நினைப்பாயாக.

(4) எவர் ஒவ்வொரு வருஷமும் மார்கழி மாதம் சுக்கில பஞ்சமி திதியில் சிறந்த பிராம்மணர்களால் அபிஷேகம், அலங்காரம் அர்ச்சனை இவைகளால் ஆராதிக்கப்படுகிறாரோ, பஞ்சமியின் முதல் நாள், மறுநாள் பூர்வாராதனை உத்திர ஆராதனை இந்த விழாவுடன் கூடியவரும், பிராம்மணர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பவரும் ஆக விளங்குகிறாரோ, அப்படிப்பட்ட யதிச்ரேஷ்டர் எங்கள் வேண்டுகோளைக் கேட்டு அருளட்டும்.

(5) கருணையைக் காண்பிக்கும் கையுள்ள, இரக்கமுள்ள கடைக்கண்கள் உள்ள, பூஜிக்கத் தகுந்த பஞ்சமுகாஞ்ஜ நேயரை தியானிப்பவரும், அசைவற்ற பக்தி, சிறந்த விரதங்கள், தபஸ், வைராக்கியம், பாக்யம் இவைகளுக்கு இருப்பிடமானவரும் ஸ்ரீ கோபாலன் ரங்கவிட்டலன் இவர்களின் பாதங்களை இடைவிடாமல் தியானிப்பதினால் பரிசுத்தமான ஆத்மாவை உடையவரும்

ஆன ஸ்ரீ சங்கர்ஷண பூஜ்ய சரணர் எப்பொழுதும் எங்களுக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

(6) எவருடைய பிருந்தாவனத்தை தரிசித்த மாத்திரத்தினால் கிருஹபீடை, பயம் இவை போகிறதோ அவரை நினைத்த மாத்திரத்தினால் வயிற்றில் உள்ள குல்மம் முதலிய துன்பங்கள் போகிறதோ, எவருடைய மந்திரத்தின் பொருளை ஜபிப்பதினால் சிறந்த கண்கள் ஏற்படுகிறதோ, அப்படிப்பட்ட சங்கர்ஷணர் என்ற குரு பாஹுதா நதியின் கரையில் வசித்துக் கொண்டு விளங்குகிறார்.

(7) பூர்ணப்ரஞருடைய மத்வ மதத்தினுடைய அம்ருதக் கடலில் தோன்றிய சம்பூர்ண சந்திரன் போன்றவரும், பாஹுதா நதியின் கரையில் உள்ள பிருந்தாவனத்தில் வசிப்பவரும், சம்பத்கிரி மலையில் உள்ள நரசிம்மரின் அருளால் (சம்சாரத்தைக்) கடந்தவரும் தன்னைவணங்கும் ஜனங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவருமான ஸ்ரீஸங்கர்ஷணர் பொருட்டு நமஸ்காரம்.

(8) நல்லோர்களின் தாபங்களை அம்ருதம் போன் பார்வையினால் போக்குபவரும் தன்னை வேண்டும் பக்தர்கள் இடைவிடாத, பயங்கரமான, பலவிதமான உபத்திரவங்களை போக்குபவரும் அநேக சிறந்த சடைகளால் பிரகாசிக்கின்ற சிறு அறிவுள்ள யதியாக ஸ்ரீஸங்கர்ஷண குரு விளங்குகிறார்.

(9) பிருந்தாவனத்தைக் கட்டுவதில் சிறந்த பிராமணர்களால் சோதிக்கப்பட்டு இயற்றப்பட்டதும், சிறந்த ஒளியுள்ள முகமுள்ளவரும் நன்கு வளர்ந்த நகங்கள் உள்ளவரும். பிரகாசிக்கின்ற சிகையுள்ளவரும் (ஜடையுள்ளவரும்) சிறந்த ஒழுக்கத்தினால் பிரகாசிக்கும் அங்கங்கள் உள்ளவரும் காந்திக்குவியல் போன்றவரும் சிறந்த சங்கர்ஷணர் என்ற ஜ்யோதியை தியானிப்பவர்களுக்கு க்ஷேமம் உண்டாகும்.

(10) ஸ்ரீ ரத்ன மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட சங்கர்ஷண தீர்த்தருடைய மஹிமை, ஸ்தோத்திரம் கோதாவரி தீரவாஸியான வேங்கடரமணரால் செய்யப்பட்டது. இந்த ஸ்தோத்திரத்தை பகலும் இரவும் படிக்கின்றவர்களுக்கும், கேட்கின்றவர்களுக்கும், விரும்பியவற்றைக் கொடுப்பதுடன் பக்தி, மோக்ஷத்தையும் அருளுகிறது.

## 4. "அத ஸ்ரீ ஸங்கர்ஷண மங்களாஷ்டகம்"

ஸ்ரீவித்யுத் கமனீய க்ருஷ்ண ஜலத ப்ரோத்யத்தயோதார வாக்
தாரா பூரித தீர ஸத்விஜ விஹாராதார போதா ஸய:
ஸாத்குண்ய க்ரதிதாத்மவித் விஜயதே ஸத்யஸ் ஸனஸ்யுச்யுதே
தத்யான் மங்கள மாஸ்ரிதாமரதரு: ஸங்கர்ஷணாக்யோ
குரு: (1)

ஸம்ஸ்த்துத்வா ஸ்துதிபி: ப்ரணம்ய ஸிரஸா ஸம்யக் பரிக்ரம்ய யம்
ஸாந்த ஸ்வாந்த மனுஸ்மரன்னபிமதா நாபுஸ்ஸமஸ்தா நரா:

ஸௌம்ய: கில் பிஷன்னுரோலஸதி ந: ஸம்பத்கிரிப்ராந்தரே
தத்யான் மங்கள மாஸ்ரிதாமரதரு : ஸங்கர்ஷணாக்யோ
குரு: (2)

வந்தாருஸ்துதி வேதபாடநினத ப்ருந்தாவனே பூத்யுஷத்
வ்ருந்தாப்யர்சித ஸூனதாம துளஸிபூஷா விஸேஷைஸ்ஸமம்
சர்க்யா ஹேமஸரூப ரூபகலிதோப்ராஜத்யஸெள யஸ்ஸ னோ
தத்யான் மங்கள மாஸ்ரிதாமரதரு: ஸங்கர்ஷணாக்யோ
குரு: (3)

ய: கௌபீன ஸராட்பணாங்கிதமிதம் த்ரய்யக்ஷ மம்ஸே ஜ்வலத்
பாலாக்ஷம் மமதர்ஸ யன்னிதி ஜடாஜூடம் வ ஹன் ராஜதே
ஸ்வப்னேஷ்வாத்ம விதாம் நிபோத்ய ஸததம் ஸ்வாலங்க்ரியா
பிஸ்ஸனோ
தத்யான் மங்கள மாஸ்ரிதாமரதரு: ஸங்கர்ஷணாக்யோ
குரு: (4)

காஷாயம் வஸனம் கமண்டலுமுரஸ்கஞ்ஜாக்ஷமால்யம் முகே
ஸாங்காரக்ஷத புண்ட்ரமூர்த்வரசிதம் சக்ராதிமுத்ராங்கிதம்
தண்டம் பாணிதலே வஹத்ஸு மஹ ஸா ஸம்ஸோபிதோ
யஸ்ஸ னோ
தத்யான் மங்கள மாஸ்ரிதாமர தரு: ஸங்கர்ஷணாக்யோ
குரு: (5)

ஆர்த்தானாமபய ப்ரதான ஸுக்ருதா வத்யாத்ம ஸம்போதனே
நம்ரீபாவ ஸமீயுஷாம் ஸுவிதுஷாம் ஸன்மானனை கவ்ரதம்
ப்ரத்யூஹாத்ரி கதம்ப பேத ஸத்ருஸ: ப்ரக்ஞாசணோ யஸ்ஸ னோ
தத்யான் மங்கள மாஸ்ரி தாமர தரு: ஸங்கர்ஷணாக்யோ
குரு: (6)

துஷ்யன்ஸிஷ்ய ஜனைஸ்ஸமம் ப்ரதிதினம் ஸந்தர்பயிஷ்யன்னயம்
ஸத்ராமத்ர ஸுபோஜ்ய போஜனசயம் ஸத்ரம் ப்ரகல்ப்ய த்ரயீ
ப்ராதர்யத்ர தினத்ரயம் கலயதி ஸ்வாராதனே யஸ்ஸ னோ
தத்யான் மங்கள மாஸ்ரிதாமர தரு: ஸங்கர்ஷணாக்யோ
குரு: (7)

பேரீகாஹளிகாரவைர் பஹுவிதைர் வாத்யஸ்வனை ஸ்சாமரைஸ்
சத்ராத்யை ருபஹார தபநிசனயை தீபோச்சயை: பாயஸை:
பாகை: பூவி விதார்ச்சனை: கலயதே ஸ்வாராதனே யஸ்ஸ னோ
தத்யான் மங்கள மாஸ்திரிதாமர தரு: ஸங்கர்ஷணாக்யோ
குரு: (8)

இத்யாக்யாத ஸுமங்களாஷ்டகமிதம் கோதாதடீவாஸினா

ஸஸ்தம் வேங்கட பூஸுரேண கவினா கல்யாண ஸம்பத் தனம்
கல்யாணாகம காரணப்ரபடதாம் காலத்ரயே ஸத்குரோ:
ஸ்ரீஸங்கர்ஷண தீர்த்த பூஜ்ய சரண ஸ்ரீமத் ப்ரஸாதாத் ஸதா (9)

இதி ஸ்ரீமத் கவி குலதிலக வாகிஸதீர்த்த
கரஸஞ்ஜாத ஸ்ரீவாதிராஜ தீர்த்த
குரு ப்ரஸாத ப்ரஸாதித போதாங்குர
மனோகண வேங்கடரமண் பூஸுரேண
பணிதம் ஸங்கர்ஷ்ண மங்களாஷ்டகம்

ஸம்பூர்ணம்
ஸ்ரீக்ருஷ்ணர் பணமஸ்து

**ஸ்ரீ ஸங்கர்ஷண மங்களாஷ்டகத்தின் அர்த்தம்**

(1) எவர் மின்னல் போல் அழகுள்ளவரும் க்ருஷ்ணனாகிய (கரிய) மேகத்தின் இடியுடன் தோன்றிய தாராளமான வார்த்தைப் பெருக்காகிய மழையால் நிரம்பி கம்பீரமாக விளங்குபவரும் சிறந்த பிராம்மணர்களுக்கு அறிவைக் கொடுக்கக்கூடிய விருப்பம் உள்ளவரும், சிறந்த குணங்களுடன் கூடிய ஆத்மக் ஞானத்தை அறிந்தவரும், எப்போதும் பிரகாசிப்பவருமாக இருக்கிறாரோ, அப்படிப்பட்டவரும், அண்டியவர்களுக்குக் கற்பகவிருக்ஷம் போன்றவருமான சங்கர்ஷண குரு நமக்கு மங்களத்தை கொடுக்கட்டும்.

(2) எவரைத் தோத்திரங்களால் துதிக்கும் தலையினால் வணங்கியும் எவருடைய பிருந்தாவனத்தைப் பிரதக்ஷிணம் செய்தும் ஜனங்கள் தங்கள் விருப்பத்தை முழுவதையும் அடைந்துள்ளார் களோ, எவர் அழகுள்ளவரும் பாபங்களைப் போக்குகின்றவரும் சம்பத்கிரி மலையின் அடிவாரத்தில் பிரகாசிக்கும் சிறந்த யதியுமாக விளங்குகிறாரோ, அப்படிப்பட்ட வரும், அண்டியவர்களுக்குக் கற்பக விருக்ஷம் போன்றவருமான சங்கர்ஷண குரு நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

(3) எவர் வணங்குகின்றவர்களால் சூழப்பட்டு ஸ்தோத்ர வேதங்களின் கோஷங்கள் சுற்றிலும் ஒலிக்கும்படியாக
பிருந்வனத்தில் வீற்றிருப்பவரும், பிருந்தையினால் அர்ச்சிக்கப் பட்ட புஷ்பம் துளசி மாலைகளால் அலங்கரிக்கப்பட்டவரும். கவியினால் தங்க நிறத்துக்குச் சமம் ஆனவரும் ஆக கொசிக்கிறாரோ, அப்படிப்பட்டவரும் அண்டியவர்களுக்குக் மார்பக விருக்ஷம் போன்றவருமான சங்கர்ஷண குரு நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

(4) எவர் கௌபீனத்தினால் பிரகாசிப்பவரும் பாம்பின் படத்தினால் அடையாளம் செய்யப்பட்டவரும் முக்கண்ணுள்ள வரின் அம்சராகவும் தோளில் பிரகாசிக்கும் மாலை உடையவரும் நெற்றிக் கண்ணுள்ளவரும்

ஜடைக் கூட்டத்தை உடையவருமாக பிரகாசிக்கிறாரோ, எவர் ஸ்வப்னத்தில் ஆத்மக் ஞானத்தை போதிப்பவரும் அலங்காரத்தினால் பிரகாசிப்பவரும் ஆக இருக்கிறாரோ, அப்படிப்பட்டவரும், அண்டியவர்களுக்குக் கற்பகம் மரம் போன்றவருமான சங்கர்ஷண குரு நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

(5) எவர் காஷாய ஆடை அணிந்திருப்பவரும், கமண்டலு தாமரை மணிமாலை நெற்றியில் அங்காரம், அக்ஷதை, ஊர்த்துவ புண்ட்ரம், சங்குசக்ரம் முதலிய முத்திரைகள், கையில் தண்டம் இவைகளால் பிரகாசிப்பவரும், சிறந்த ஒளியுடன் கூடியவரும் ஆக இருக்கிறாரோ, அப்படிப்பட்டவரும் அண்டியவர்களுக்குக் கற்பக விருக்ஷம் போன்றவருமான சங்கர்ஷண குரு நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

(6) எவர் துன்பப்படுகின்றவர்களுக்கு அபயத்தை அளிப்பதான நற்காரியத்தைச் செய்பவரும், புண்யமான, தூய்மையான ஆத்ம ஞானத்தைப் போதிப்பவரும் வணக்கமுள்ள அறிவாளிகளுக்கு ஞானமாகிய சன்மானத்தை அளிப்பதையே விரதமாகக் கொண்டவரும், இடையூராகிய மலையைப் பிளப்பவரும் (இடையூரைப் போக்குபவரும்) ப்ரக்ஞானமுள்ளவரும் ஆக விளங்குகிறாரோ, அப்படிப்பட்டவரும் அண்டியவர்களுக்குக் கற்பகவிருக்ஷம் போன்ற சங்கர்ஷண குரு நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

(7) எவர் சிஷ்யர்களுடன் தினமும் சந்தோஷத்துடன் கூடியிருப்பவரும் இங்கு (பிருந்தாவனத்தையடுத்த) சத்திரத்தில் சந்தர்ப்பணை செய்யவைப்பவரும், மூன்று வேதங்களை கெம் செய்வதன் மூலம் (வேதமாகிய) போஜனத்தை அளிப்பவரும் மூன்று நாள் ஆராதனை உத்ஸவத்துடன் கூடியவரும் ஆக விளங்குகிறாரோ, அப்படிப்பட்டவரும், அண்டியவர்களுக்குக் கற்பக விருக்ஷம் போன்றவருமான சங்கர்ஷண குரு நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

(8) எவர் பேரிவாத்யம் காஹளிகை வாத்யம் இன்னும் பலவகையான வாத்யங்களாலும், சாமரம், தூபம், தீபம் முதலிய உபசாரங்களாலும் அன்னம் பாயசம் கூடிய பலவகையான அர்ச்சனையாலான, ஆராதனையால் பிரகாசிப்பவரும் ஆக விளங்குகிறாரோ, அப்படிப்பட்டவரும், அண்டியவர்களுக்குக் கற்பக விருக்ஷம் போன்றவருமான சங்கர்ஷண குரு நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

(9) கோதாவரிக்கரையில் வசிக்கின்ற வேங்கட ரமணகவியினால் இயற்றப்பட்டதும், பிரசித்தமானதும் கல்யாணம், சம்பத்து, தனமுமாகியதுமான இந்த மங்களாஷ்டகம், இதனை மூன்று காலத்திலும் படிக்கின்றவர்களுக்கு ஸத்குரு ஸ்ரீ சங்கர்ஷண தீர்த்த பூஜ்ய சரண ஸ்ரீமானின் திருவருளால் சகல நன்மைகளையும் தரும்.

**ராக: கல்யாணி ஏக-தாளம்**

பல்லவி:

கொளல நூதுத பாரோகம்ஸமர்த்தன கிருஷ்ணா:

(அனு பல்லவி)

காயோ ந மனப்யாக கருணா ஸாகர நீனு||

சரணம்

அந்திகே வட்யாணனு புரனிட்டுகொண்டு
சந்ததி குணியுத இந்து வதன பாரோ (1)

கோபீய மனோஹர கோகுல ப்ரியகர
கோபால சகநீனு கோபீய கந்தபாரோ (2)

மந்தரோத்தார நீனே, மதுரகே போகலு
சுந்தரரமணனே, சங்கர்ஷண விடலனோ (3)

**ராக: பந்துவராளி--த்ருபுட தாள**

பல்லவி ச்ருதி, ஸ்மிருதி களிந்த, துதிசலாரனோ நின்ன
கரிவரத, காளிங்க மர்த்தன கிருஷ்ணா

அனுபல்லவி

பவதொளகே பந்து நா பஹள வியாதிகள் பட்டு
நின்னங்க்ர கமலவனு நோடதலே பாண்டளதி
வ்யாப்த்தனே பகுகால திந்தலி நம்பி
கொண்டவனெந்து சலஹு ஸ்ரீஹரியே (1)

ஜநும ஜநுமவ திருகி ஜக தேகனாதனே
நின்ன பாதவனே நெரநம்பிதே என்னவ
குணதோஷக ளெணிசிதே எச்சரிகே எனகித்து
கடே ஹாயிஸய கருணாநிதியே க்ருஷ்ணா (2)

மூல காரண நீனு மூருவித துக்கவனு
முருதொடிஸி காயபேகோகமலநயனனே
நின்ன சரணக்கே ஒளகாதே காருண்ய
நிதி நீனு சங்கர்ஷண விடல கிருஷ்ணா (3)

**ராக: பந்துவராளி ஆதி-தாள**

ப்ருதிவி ஹோகி உதகவநுங்கிது
உதகவ நுங்கிது அக்னியன்னு

அக்னிஹோகி வாயுன்ன நுங்கிது
வாயுஹோகி ஆகாஸன நுங்கிது (1)

ரூபஹோகி ரஸவன்ன நுங்கிது
ரஸ ஹோகி கந்தவ நுங்கிது - கந்த
ஹோகி ஸ்பரிஸவ ஸேரிது।। (2)
பர்வத ஹோகி தேஸவ நுங்கிது
பர்வத நுங்கிது பாண்டளவு
பாண்டள ஹோகி க்ருஷ்ணன நுங்கிது
ஸங்கர்ஷண விடல தானே பல்ல|| (3)

பல்லவி:

பாரதி ரமணனே தயமாடோ

(அனு பல்லவி)

நீதயமாடோக்ருபெயிந்த நோடோ
வரகள நீடு தாஸன பிடப்யாடோ (அ.பல்லவி)

ஹே நிர்தோஷ-ஸுந்தர கோஷ- கொடு
சந்தோஷ-எணிஸதே குண தோஷ (1)

நா நின்னவனோ - பதகெரகுவேனோ
ஹேளி கொம்புவேனோ - என்னனு
பிடுவது பகெயேனோ (2)

ஸ்ரீ மதநந்த ஈஸ துரந்த- பஹுவித
சிந்த சங்கர்ஷண விடல பரிஹரிஸோ காந்தா (3)

|| ஸ்ரீ : ||

**அதமங்கள சமயுத ஸங்கர்ஷண**
**யதீந்தர ஸ்தோத்ரம்**

காஞ்சனாத்ரிநிபம் தேஹம் ஞான முத்ராங்கிதம் கரம்
ஜடா மண்டித மூர்த்தானம் பாலநேத்ரம் யதிம் பஜே (1)

மத்வசிஷ்யம் மத்வபக்தம் மத்வ சாஸ்தரா வலம்பினம்
மத்வசாஸ்த்ர ப்ரவக்தாரம் ஸங்கர்ஷணயதிம் பஜே (2)

ப்ருந்தாவனே லஸந்தம் த்வாம் பத்மாஸன விராஜிதம்
சின்மயம் ஞானதம் மௌனம் வந்தே ஸங்கர்ஷணம் முனிம் (3)

நமாம்ய ஞாஸதிமிரம் நாசயந்தம் ஸ்வதேஜஸா
பானுதுல்ய ப்ராபாகாரம் ஸ்மரந்தம் மானஸே ஹரிம் (4)

ப்ருந்தாவன ஜலம் யஸ்து நரஹ்ப்பிபதி நித்யச:
தஸ்ய ரோகான் வினச்யந்தம் ஸங்கர்ஷணகுரும்பஜே (5)

ப்ருந்தாவனஸ்ய ஸேவாந்து குர்வதாம் தேஹினாம் ஸதா
மனஸ்ஸந்தாபஹர்த்தாரம் ஸங்கர்ஷண முனிம் பஜே (6)

உத்தரே ராகவேந்தரஸ்ச தக்ஷிணே சங்கராம்சக:
யதீந்த்ரௌ க்ஷேமதாதாரௌ வந்தே தௌக்ஞான முக்தயே (7)

பணிதல்பே சயானஸ்ய ஸ்மரந்தம் பணிபூஷிதம்
ஹரிஸ்ஸர்வோத்த மோதேவஹ பணந்தம் நௌமி சாங்கரம் (8)

பணிகூட கிரீடஸ்த மணிபிசோபிதம் மஹ:
ஸங்கர்ஷ்ண யதேர்காத்ரம் வந்தே ரத்ன ப்ரபாமயம் (9)

சாத்ராகாராஹிராஜேன ராஜிதம் சிரஸி ஸுந்தரம்
ப்ருந்தாவன கதம் மௌனிம் சிந்தயேத் ஹ்ருதி சாங்கரம் (10)

ஸர்வேப்யோ யதிவர்யேப்யோ விலக்ஷண ஸ்வரூபகம்
ஜடிலம் பாலநேத்ரம் ச நௌமி ஸங்கர்ஷணம் யதிம் (11)

ஸர்பவ்ருஸ்சிக கீடாதி விஷஜந்து ப்ரபீடிதம்
நரம் ஸ்வநாம மந்த்ரேண தோஷயந்தம் யதிம் பஜே (12)

பஞ்சானனகபிம் மூர்த்னி ததக்ரே பணினாம் பதிம்
ப்ருந்தாவனாந்தரே விஷ்ணும் த்யாயந்தம் நௌமி யோகினம் (13)

சின்முத்ராம் ஞானமுத்ராம் சதர்சினே தாயினே நம:
ஞானரூபாய பக்தானாம் ரக்ஷிணே வரத மூர்த்தயே (14)

கரபூண்டி நாமக்ராமஸ்த ப்ருந்தாவன நிவாஸினே
ஸங்கர்ஷணாய குரவே மங்களம் சாங்கராயதே (15)

மங்களம் பாலநேத்ராய ஜடாமண்டல தாரிணே

ஸர்வசாஸ்த்ரார்த்த விதுஷே நமதாம் காமதேனவே (16)

வேத வேதாந்த தத்வார்த்த விதுஷாம் அக்ரமூர்த்தயே
மங்களம் ரங்க பக்தாய ஸ்வாச் ரிதாபீஷ்டதாயினே (17)

ஸம்பத்கிரி தலாவாஸ ந்ருஸிம்ஹத்யான மூர்தயே
மங்களம் பாஹுதாதீரப்ருந்தாவன லயாய தே (18)
ந்ருஸிம்ஹ பாதஸம் ஸ்மர்த்ரே தத்பூஜா நிரதாய தே
மங்களம் க்ருஷ்ணபூஜாயாம் ஸதா ஸக்தாய யோகினே (19)

ஹரிகதாம்ருத ஸாரார்த்த ஞானினே பக்ததாயினே
ஹரேஹ்கதா ஸுதுஷ்டாய யதயே தே ஸுமங்களம் (20)

ப்ருந்தாவனே ஸ்வபிம்பஸ்ய தர்சினே பக்த கோடயே
மங்களம் ஹேமரூபாய பத்மாக்ஷ மணிதாரிணே (21)

ஊர்த்வ புண்ட்ராக்ஷ தாங்காரதுளஸீமால தாரிணே
ஸ்வாச்ரிதேப்யஸ்ஸதாதாத்ரே மங்களம்தே ஸுமங்களம் (22)

மார்கஸீர்ஷ ஸிதேபக்ஷே பஞ்சம்யாம் சுபவாசரே
யோகநித்ராம் ப்ரபன்னாய மங்களம் முனிவராய தே (23)

பஞ்சானன கபிம் பக்த்யா வசீக்ருத்ய நிரந்தரம்
ஹ்ருதயே நாரஸிம்ஹம்ச த்யாயதே (அ)ஸ்து ஸுமங்களம் (24)

நாரசிம்ஹே த்ருடாம் பக்திம் குர்வதே வீரயோகினே
ஸ்ரீந்ருஸிம்ஹஸுஸேவாயாம் நிரதாய ஸுமங்களம் (25)

ரங்கவிட்டல பூஜாயாம் ததா கோபால பூஜனே
ஆஸக்தாய வரேண்யாய சங்கராம்சாய மங்களம் (26)

ஸ்ரீம் சம் ஸங்கர்ஷணாயேதி ப்ரணவாத்யம் நமோந்த்யகம்
கர்ஷணாஜ்ஜபதாம் பாபம் ஸங்கர்ஷண யதிம் விது: (27)

பாபான்யாசு வினஸ்யந்தி ப்ருந்தாவன நிரீக்ஷணாத்
ஸங்கர்ஷணயதேர் முக்திம் லபதே மனுஜோ புவி (28)

ப்ரதக்ஷிணேன ரோகாம்ஸ்ச குக்ஷிநேத்ராபி பீடிதான்
ஸங்கர்ண யதி:- சீக்ரம் நரான் ரக்ஷதி ஸேவயா (30)

ஸங்கர்ஷண யதேர்திவ்யம் மங்களம் ஸ்தோத்ர ஸம்யுதம்
படேன்நித்யம் நரோநாரீலபதே ஸம் தியம் ஸுகம் (29)

ப்ருந்தாவனஸ்ய ஸேவாம்து யா வந்த்யா பக்தி பூர்வகம்
கரோதி லபதே ஸா(அ)சு ஸுபுத்ரம் ஞானஸம்யுதம் (31)
ஞானஸம்பத்கரம் ஸ்தோத்ரம் ஆயுராரோக்ய வர்தனம்
ஸ்ரீங்கர்ஷணயதி:-ஸ் ருத்வா தஸ்யாபீஷ்டம் ப்ரயச்சதி (32)

லக்ஷ்மீந்ருஸிம்ஹ தாஸேன ஸங்கர்ஷண யதே:- ஸ்துதி:
க்ருதா தேன ந்ருஸிம்ஹஸ்ஸ்ரீ ப்ரீதோதிஸது மங்களம். (33)

இங்ஙனம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹதாஸ வியாஸாசார் அவர்களால் செய்யப்பட்ட ஸ்ரீஸங்கர்ஷண யதீந்த்ர ஸ்தோத்ரம் முற்றும்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமாஸ்து

## ஸ்ரீ ஸங்கர்ஷண ஒடய யதீந்த்ர அஷ்டோத்தரஸத நாமாவளி:

**(முதலில் 'ஓம்' என்றும் முடிவில் 'நம:' என்னும் சேர்த்து வாசிக்கவும்)**

ஸ்ரீம் ஸம் ஸங்கர்ஷணாய
ஸ்ரீருக்மிணீஸ சரணாம் புஜசஞ்சரீகாய
ஸ்ரீ ஸம்பன்னகாந்தயே
கவிஹ்ருத்ய ரஞ்ஜகாய
ஜாகரூகாய
பிருந்தாவனாந்தர லஸத்வபுஷே
அகலங்காய
அஹிராஜபணாங்காய
அலிகேக்ஷணாய
ஸுந்ருதோக்தயே (10)
ஸௌகந்திமால்ய ப்ருதே
ஸச்சாஸ்தரக்ஞாய
கவசபடனேன ஸுநேத்ர தாத்ரே
க்ருபாஸிலாய
பக்தவத்ஸலாய
பரமாத்மாந்தர்நிரீக்ஷணாய
அபயப்ரதாய
மாரிபயக்னே
சோர பயக்னே
நிர்காதாக்னி மஹாபயாபஹாய
ஸர்பலூதக கீடாதி பயத்வம்ஸினே
க்ஷயாபஸ்மார பீடாஹர்த்ரே
ஸீததாபஜ்வரஸம் ஹர்த்ரே
துஸ்ஸஹ நேத்ரரோக ஹந்த்ரே
ஸச்சரணாய
வரேண்யாய
அனாவிலாத்மனே (30)
அநிந்த்யலீலாய
ஸாந்தாய
ஸுதியே
தாந்தாய
பஜதாம் கல்பதரவே
ஸங்கராம் ஸாய
ஸங்கரக்ஞான முத்ராங்காய

யதீஸ்வராய

ஸஜ்ஜனாக்கரண்யே

பூதநாதாம்ஸாய (20)

அனகாய

ஸத்பக்த ஸங்கீர்திதாய

மாயீப நிர்பேதனாய

ஸம்யமினே

நரஹறிபாத மூலாஸ்ரயாய

அவித்யாகஹன கும்பீப பயக்னே

பணிபனாஸ்ரேத் யங்கிதாய

லலாடேக்ஷணாய

ஸோணரத்ன நேத்ர த்வாய

முத்ராங்க புஜாய (50)

ஸ்ரீகாந்தாத்புஷித மானஸாய

மார்கஸீர்ஷ ஸுக்லபஞ்சம்யர்சிதாய

பூஸுரஹர்ஷ தாயகாய

பஞ்ச முகாஞ்ஜ நேயமானஸாய

கருணா பாணயே

தபோவைராக்ய பாக்யா கராயா

கோபால ரங்கவிட்டல பதத்யான ரதாய

பிருந்தாவன தர்ஸனேன ஸர்வா பீஷ்டதாய

குல்மாதி பாதா நிவர்தகாய

மந்த்ரார்த்த நிஷேவணேன

ஸுநேத்ர தாத்ரே

பாஹுதா தடவாஸினே

பூர்ணப்ரக்ஞமதா வலம்பினே

பாஹுதா தீரவிலஸத் ப்ருந்தா வனவாஸினே

ஸம்பத்கிரி நரசிம்ஹபூஜகாய

க்ஷேத்ராவனி தேவதாத்ராத்ரே

மானவ ஸந்தாப ஸமநாய

ஸம்பத்கிர்யுபத்யகாதல வாஸினே

ஸத்ய பராயண பாணிபத்மோத் பவாய

ஸத்ஸந்துஷ்டயதிஸிஷ்யாய (40)

ஸச்சீலச் சவிதாங்காய

ருசிஸங்குலாய

ஸ்ரீரத்னமாலா விபூஷிதாய

ஸத்பக்தி முக்திப்ரதாய

தயோதாரா வாக்தாரா பூரிதாய

ஸத்விஜ போதா ஸயாய

ஸாத்குண்ய க்ரதிதாத்மவிதே (80)

ஸ்வாந்த மனு ஜப்த்ரே

ஸௌம்யாய

கில்பிஷக்னே

வந்தாருஸ் துதி வேத கோஷாய

பிருந்தாப்யர்சிதாய

ஸுனதுளஸீதாம பூஷிதாய

ஹேமஸரூப ரூபாய

கௌபீனப்ராஜஸே

த்ரய்யக்ஷாய

பாலாக்ஷாய (90)

ஜடாஜுட மண்டிதாய

ஸ்வப்னே ஆத்மக்ஞான போதனாய

காஷாய வஸனாய

கமண்டலு தராய

கஞ்ஜாக்ஷ மாலாதாத்ரே

ஸாங்கா ரக்ஷதோர்த்வ புண்ட்ர லஸித முகாய

பாணிதலே தண்டதாரிணே

ஆர்தானாமபய ப்ரதாய

மௌனவ்ரதாய

சாமராத்யுப சாரவைப வாய (100)

ஹறிகதாம்ருத ஸாரவிதே


ஸுதாமயத்ருஸே
ரௌத்ரஸஸ்வதுபத்ரவநாஸினே
ஸர்வக்ஞாய
கோடிஸடா லங்க்ருதாய
திவ்யௌ ஜஸே
விவர்தித நகாய
ப்ரேங்கச்சிகாய
ஹரிகதாம்ருத லோலுபாய
விவிதார்சனப்ரீதாய
வேங்கடபூஸுரப்ரக்யாத மஹிம்னே
(70) கல்யாணா கமனகாரணாய
ஸன்மங்களாஸ்ரித கல்பதரவே
ஸமஸ்த மங்களா பீஷ்டதாயகாய
ஸ்ரீஸங்கர்ஷண ஒடய யதீந்த்ர குரவே

# சரம ஸ்லோகம்

## ।। ஸங்கர்ஷண யதீந்த்ராய ஶாந்தாய அமல சேதஸே।

## தான்தாய பஜதாம் கல்பதரவே குரவே நமஹ ।।

**ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமாஸ்து**




ஸ்ரீ ஸ்ரீ சங்கர்ஷண ஒடையர் வாழ்க்கை வரலாறு – தமிழ்.